என் இனமே என் சனமே
என்னை உனக்கு தெரிகிறதா
எனது குரல் புரிகிறதா 2

மண்ணை இன்னும் நேசிப்பவன் – அதனால்
மரணத்தையே யாசிப்பவன் 2

என் இனமே என் சனமே

அன்னை தந்தை எனக்கு உண்டு
அன்பு செய்ய உறவும் உண்டு
என்னை நம்பி உயிர்கள் உண்டு
ஏக்கம் நெஞ்சில் நிறைய உண்டு

மண்ணை இன்னும் நேசிப்பவன் – அதனால்
மரணத்தையே யாசிப்பவன்

என் இனமே என் சனமே

பாசறை நான் புகுந்த இடம்
பதுங்குகுழி உறங்கும் இடம்
தேச நலன் எனது கடன்
தேன் தமிழே எனது விடன்

மண்ணை இன்னும் நேசிப்பவன் – அதனால்
மரணத்தையே யாசிப்பவன்

என் இனமே என் சனமே

என் முடிவில் விடிவிருக்கும்
எதிரிகளின் அழிவிருக்கும்
சந்ததிகள் சிரித்து நிற்க
சரித்திரத்தில் நிறைந்திருப்பேன் அதனால்

மண்ணை இன்னும் நேசிப்பவன் – அதனால்
மரணத்தையே யாசிப்பவன

என் இனமே என் சனமே